**செய்தி வெளியீடு எண்: 106** **நாள்: 06.02.2019**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று **(6.2.2019)** கோயம்புத்தூர் மாவட்டம், கொடிசியா தொழிற்பூங்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கோயம்புத்தூர் மாவட்ட சிறு தொழில் சங்கம் மற்றும் கொடிசியா இண்டஸ்டிரியல் பார்க் லிமிடெட் சார்பில் மோப்பிரிபாளையம் மற்றும் கள்ளப்பாளையத்தில் புதிய கொடிசியா தொழிற்பூங்காக்களை துவக்கி வைத்து ஆற்றிய உரை

---

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,**

கோவை மாவட்ட சிறு தொழில்கள் சங்கம்–கொடிசியா மற்றும் கொடிசிய தொழிற் பூங்கா நிறுவனம் மோப்பிரிபாளையம் மற்றும் கள்ளப்பாளையம் ஆகிய இடங்களில் நிறுவியுள்ள கொடிசியா தொழிற்பூங்காவை துவக்கி வைக்கும் விழாவில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இனிய விழாவில்

மாண்புமிகு மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர்
**திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்களே** கலந்து கொள்வதாக இருந்தது, தவிர்க்க முடியாத காரணங்களினால் இந்த நிகழ்ச்சியில் அவர் கலந்துகொள்ள முடியவில்லை.

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே சுருக்கமாக, விளக்கமாக பேசி அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் சகோதரர்
**திரு. எஸ்.பி.வேலுமணி அவர்களே!**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் சகோதரர்
**திரு. எம்.சி.சம்பத் அவர்களே!**

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் சகோதரர்
**திரு.பி.பென்ஜமின் அவர்களே!**

மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அண்ணன்
**திரு. பொள்ளாச்சி வி.ஜெயராமன் அவர்களே!**

இந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர்
**திரு. கனகராஜ்** அவர்களே !

பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர்
**திரு.C.மகேந்திரன்** அவர்களே !

நாடாளுமன்ற உறுப்பினர் **திரு.A.K.செல்வராஜ்** அவர்களே !

மத்திய கயிறு வாரியத் தலைவர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் **திரு.C.P.ராதாகிருஷ்ணன்** அவர்களே !

சகோதரி திருமதி. வானதி சீனிவாசன் அவர்களே!

கோயம்புத்தூர் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர்
**திரு. அர்ச்சுனன்** அவர்களே !

கோயம்புத்தூர் வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர்
**திரு. அருண்குமார்** அவர்களே !

கிணத்துக்கடவு தொகுதி சட்டமன்ற உறுப்பினர்
**திரு. சண்முகம்** அவர்களே !

மேட்டுப்பாளையம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்
**திரு. சின்னராஜ்** அவர்களே !

வால்பாறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர்
**திருமதி. கஸ்தூரி வாசு** அவர்களே !

கவுண்டம்பாளையம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்
**திரு. ஆறுக்குட்டி** அவர்களே !

சட்டப்பேரவை உறுப்பினர்
**திரு. ஈஸ்வரமூர்த்தி**அவர்களே !

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

கொடிசியா அமைப்பின் தலைவர்
திரு. ராமமூர்த்தி அவர்களே !
மேலாண்மை இயக்குநர்
டாக்டர் ஏ.வி.வரதராஜன் அவர்களே !
மற்றும் கொடிசியா அமைப்பின் நிர்வாகிகளே! அமைப்பாளர்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!
பெரியோர்களே! தாய்மார்களே!

அத்தனைபேருக்கும் முதற்கண் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தினை தெரிவித்துக் கொண்டு,

மாண்புமிகு அம்மா அவர்கள் 2015ஆம் ஆண்டில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியதைத் தொடர்ந்து, மாண்புமிகு அம்மாவின் அரசு சென்ற ஜனவரி மாதம் 23 மற்றும் 24 ஆகிய தினங்களில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை மீண்டும் நடத்தியது. இம்மாநாட்டில் 10 லட்சத்து 50 ஆயிரம் நபர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கிடும் வகையில், 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் 3 லட்சத்து 431 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டன. இவற்றில் சிறு, குறு தொழில்களுக்கு மட்டும் 32 ஆயிரத்து 206 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன.

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் துறையில் புதிய தொழில் தொடங்க **தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை** (Start up Policy) சமீபத்தில் மாண்புமிகு அம்மாவின் அரசால் வெளியிடப்பட்டுள்ளது. தொழில் நுட்பம் வழியே புத்தாக்கத்திற்கு உகந்த சூழலை உருவாக்குவதே இக்கொள்கையின் முக்கிய நோக்கமாகும். தமிழ்நாட்டில் துடிப்பான புத்தொழில் சூழலை உருவாக்குவதன் மூலம் 2023க்குள் 10 உலகளாவிய உயர் வளர்ச்சி புத்தொழில்கள் உட்பட, குறைந்த பட்சம் 5000 புத்தொழில்கள், உருவாக்கப்பட்டு, அதன் மூலம் அதிக வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி அடையும் நோக்கத்திலேயே இந்த கொள்கை வெளியிடப்பட்டுள்ளது என்பதை இங்கே பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில், தனியே ஒரு **இணையதள ஒற்றைச் சாளரத் தகவு ஏற்படுத்தப்பட்டு,** அதன் மூலம் புதிய முதலீடுகளுக்கு விரைவாகவும், எளிதாகவும் இசைவு வழங்கப்படுகிறது. இதனால், புதிய முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, ஆயிரக்கணக்கான நபர்களுக்கு புதியதாக வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களை பன்னாட்டு மயமாக்கவும், வெளிநாட்டின் ஒத்துழைப்பைப் பெறவும், தமிழ்நாட்டில் முதலீட்டை ஈர்க்கவும் ஒற்றைச் சாளர அமைப்பாக "**குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு**" ஒன்று உருவாக்க வேண்டும் என்று கொடிசியா உட்பட பலதரப்பிலிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. இது அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் சென்னைக்கு அடுத்த பெரிய தொழில் நகராக கோயம்புத்தூர் திகழ்கிறது. இங்கு பல ஆயிரம் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இவற்றின் பெரும்பாலானவை சிறு, குறு, தொழிற்சாலைகளாகும்.

கோவை மாவட்ட சிறு தொழில் அதிபர்கள் சங்கம், அதாவது, கொடிசியா 40 உறுப்பினர்களுடன் 1969ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. சிறுதொழில் செய்வோரின் குறைகள் மற்றும் தொழில் வளர்ச்சிக்கான கருத்துக்களை அரசாங்கத்திடம் எடுத்துச் செல்லவும், அதற்கான தீர்வு காணவும் இந்த சங்கம் உருவாக்கப்பட்டது. அந்த வகையில் சுமார் 50 ஆண்டு காலமாக இப்பகுதியின் தொழில் வளர்ச்சிக்கு கொடிசியா செயல்பட்டு வருகிறது. 40 உறுப்பினர்களுடன் தொடங்கப்பட்ட இச்சங்கம், இன்று கிட்டத்தட்ட ஆறாயிரம் உறுப்பினர்களுக்கு மேலான எண்ணிக்கையுடன் செயல்பட்டு வருகிறது என்பதை அறிவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

சிறு தொழில் வளர்ச்சிக்கும், வளத்திற்கும் வழிகோலிட துவக்கப்பட்ட இச்சங்கம், கோயம்புத்தூரின் தொழில் துறை உறுதியாக வளர்ச்சியடைய காரணமாக இருந்து வருவது மட்டுமல்லாமல், தொழில் முனைவோரின் தேவைகளை ஒட்டி பல கருத்தரங்குகளும், பயிலரங்குகளும், தொழில் துறை கண்காட்சிகளும் நடத்தி வருகிறது.

கொடிசியாவின் சிறப்பு செயல்பாடுகளில் ஒன்றாக அதன் தொழில் கண்காட்சிகளை குறிப்பிடலாம். குறிப்பாக, 1988ஆம் ஆண்டு பெரிய அளவிலான இன்டெக் 88 எனும் சர்வதேச கண்காட்சி நடைபெற்றது.

இச்சங்கம் நடத்தும் பன்னாட்டு தொழில் கண்காட்சிகள், ஆரம்பத்தில் பி.எஸ்.ஜி. மைதானத்தில் நடந்து வந்தன. பின்னர், கோவையை அடுத்த விளாங்குறிச்சியில் 40 ஏக்கர் பரப்பளவில் 11 கோடி ரூபாய் செலவில் ஒரு லட்சத்து 60 ஆயிரம் சதுர அடி பரப்பளவு கொண்ட ஒரு மாபெரும் கட்டடத்தை கட்டியது. இந்தக் கட்டடம் யாதொரு தூணும் இன்றி கட்டப்பட்டுள்ளது ஓர் பொறியியல் சாதனையாகும். **இக்கட்டடம் கொடிசியா உறுப்பினர்களின் ஒற்றுமைக்கும், திறமைக்கும் சான்றாக விளங்குகிறது.** உலகத்தரமான கண்காட்சிகளை நடத்திட வேண்டிய அனைத்து வசதிகளையும் தன்னகத்தே கொண்டு, புது டில்லியிலுள்ள பிரகதி மைதானத்திற்கு ஒப்பாக, தென்னிந்தியாவிலேயே மிகப்பெரிய தொழில் துறை காட்சிக் கூடமாகவும் இந்த வளாகம் விளங்குகிறது.

2016ஆம் ஆண்டுக்கான மத்திய அரசின் மாவட்ட அளவிலான சிறந்த தொழில் அமைப்புக்கான BMO விருது, 2018ஆம் ஆண்டுக்கான பொறுப்புணர்வு மிக்க தொழில் அமைப்புக்கான விருது ஆகிய விருதுகளை கொடிசியா பெற்றுள்ளது. இவ்விருதுகள் தொழில் வளர்ச்சிக்கு இந்த அமைப்பு காட்டும் அக்கறைக்கு கிடைத்த அங்கீகாரம் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேற்கு மண்டலத்தைச் சார்ந்த இப்பகுதி மக்கள் இயற்கையாகவே தொழில் தொடங்குவதில் ஆர்வம் மிக்கவர்கள். அதனால் தான், கோயம்புத்தூர் மாவட்டமும், அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களும் மிக வேகமாக வளர்ச்சி அடைந்து வருகின்றன. எனவே தான், இப்பகுதி மக்களின் முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, கோயம்புத்தூர் மாநகரத்தில் புதிய மெட்ரோ ரயில் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான விரிவான சாத்தியக்கூறு மற்றும் திட்ட அறிக்கை தயாரிக்கும் ஆரம்ப கட்டப் பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் ஓராண்டில் முடிவடையும் என்று இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

வளர்ந்து வரும் கோயம்புத்தூர் நகர தொழில் வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கும் விதமாக விமான போக்குவரத்து சேவையினை அதிகரிக்கும் வகையில்,

தற்போதுள்ள விமான நிலையத்தை விரிவாக்கம் செய்வதற்கான நில எடுப்புப் பணிகள் மிக விரைவாக நடைபெற்று வருகின்றன.

மேலும், இம்மாவட்ட தொழில் முனைவோர்கள் மற்றும் பொதுமக்கள் பயனடையும் விதத்தில் கோயம்புத்தூர் விமான நிலையத்தில் இரவில் தங்கிச் செல்லும் விமானங்களுக்கான எரிபொருள் மீதான வரியினை 29 சதவீதத்தில் இருந்து ஒரு சதவீதமாக குறைத்து மாண்புமிகு அம்மாவின் அரசு உத்தரவிட்டுள்ளது.

கோயம்புத்தூரில் பெருகி வரும் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்துவதற்காக ஆற்றுப்பாலம் முதல் உக்கடம் சந்திப்பு வரை மேம்பாலம் ஒன்றினை அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள். இத்திட்டத்திற்காக ரூபாய் 128 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சமயத்தில், பொள்ளாச்சி மற்றும் கோவையைச் சார்ந்த பொதுமக்கள் இம்மேம்பாலத் திட்டத்தினை பொள்ளாட்சி–பாலக்காடு சாலை சந்திப்பு வரை நீட்டிப்பு செய்ய கோரிக்கை வைத்தார்கள். இதற்கான விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணி முடிந்தவுடன், ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பாலம் அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்படும். ஏற்கனவே மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் விரிவாகச் சொன்னார்கள், அவரும் அந்தக் கோரிக்கையை வைத்தார். அவருடைய கோரிக்கையையும் நிறைவேற்றும்விதமாக அந்தப் பணி தொடங்கப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

இவ்விரு திட்டங்களும் 2020–க்குள் முடிவடையும் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இந்தத் திட்டங்கள் மூலம் கோவை மாநகரத்திலிருந்து பொள்ளாச்சி செல்லும் நேரம் குறைவதோடு மட்டுமல்லாமல், உக்கடம் பகுதியில் போக்குவரத்து நெரிசலும் வெகுவாகக் குறையும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், கோவை மாநகரத்திலுள்ள அவினாசி சாலையில், உப்பிலிபாளையம் முதல் சின்னியம்பாளையம் வரை 9 கி.மீ. நீளமுள்ள ஓர் உயர்மட்ட சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் கோவை மாநகரின் போக்குவரத்து நெரிசல் பெருமளவில் குறையும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெருகி வரும் கோயம்புத்தூர் மாநகராட்சியின் தேவையை கருத்தில் கொண்டு, 24 மணி நேரமும் குடிநீர் வழங்கும் திட்டத்தின் கட்டுமானம், இயக்கங்கள் மற்றும் பராமரிப்புச் செலவு உட்பட அனைத்துப் பணிகளுக்காவும் ரூபாய் 2961 கோடிக்கு பணியாணை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு களஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டு முன்னோடிப் பகுதியாக ஆர்.எஸ்.புரம் பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டம் நிறைவேறுகின்றபொழுது கோவை மாநகரம், கோவை மாவட்டத்தில் இருக்கின்ற மக்களுக்கு தங்குதடையில்லாமல் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட கவுண்டம்பாளையம், வடவள்ளி மற்றும் வீரகேரளம் ஆகிய மூன்று பகுதிகளிலும் குடிநீர் அபிவிருத்தி திட்டத்திற்கான நிர்வாக ஒப்புதல் ரூபாய் 108 கோடிக்கு வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்கான 85 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள அனைத்துப் பணிகளும் வரும் ஏப்ரல், 2019–க்குள் முடிவடைந்து, இத்திட்டத்தை முழுமையாக மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர அலுவலர்களுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், இப்பகுதி விவசாய பெருங்குடி மக்களின் நீண்ட கால கோரிக்கையை ஏற்று, 1,652 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநில நிதியின் மூலம் **அத்திக்கடவு – அவிநாசி திட்டம்** செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன. அந்த ஒப்பந்தப் புள்ளி இறுதி செய்யப்பட்டு இந்த மாத

இறுதிக்குள் இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நிகழ்ச்சியின்வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப்புற பகுதிகள் வளர்ச்சி பெற வேண்டும் என்ற எண்ணத்தில், கள்ளப்பாளையம், மோப்பிரிபாளையம் ஆகிய இரு இடங்களில் 375 ஏக்கர் பரப்பளவில் கொடிசியா தொழில் பூங்காக்களை அமைத்துள்ளது. அதை நான் இன்று திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த 375 ஏக்கர் நிலத்தில் மோப்பிரிபாளையத்தில் மாண்புமிகு அம்மாவின் அரசு அளித்த 5 ஏக்கர் நிலமும் அடங்கும். மேலும், இவ்விரண்டு பூங்காக்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் வகையில் மாண்புமிகு அம்மாவின் அரசு தலா 10 கோடி ரூபாய் வழங்க ஆணையிட்டுள்ளது.

இத்தொழில் பூங்காவில் 322 சிறுதொழில் நிறுவனங்கள் தங்கள் தொழில் கூடங்களை அமைக்க உள்ளன. இதன் மூலம் சுமார் 3,000 கோடி ரூபாய்க்கு முதலீடுகள் வர வாய்ப்பும், சுமார் 10 ஆயிரம் நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும், 20 ஆயிரம் நபர்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பும் கிடைக்கப் பெறும். இது சிறு தொழில் வளர்ச்சிக்காக கொடிசியா அமைப்பு ஆற்றும் பணிகளின் ஒரு மைல்கல்லாக அமைந்துள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது.

கொடிசியா ராணுவத் தொழில் புத்தாக்க மையம், அடல் இன்குபேஷன் மையம், கொடிசியா திறன் மேம்பாட்டு மையம், கூட்டரங்க மையம் ஆகியவை கொடிசியாவின் வருங்காலத் திட்டங்கள் என்பதை அறிவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

கொடிசியா இது போன்ற தொழில் பூங்காக்களை பல்வேறு பின்தங்கிய பகுதிகளில் அமைத்து மேன்மேலும் வளர வேண்டும் என்று மனதார பாராட்டுகிறேன்.

தமிழ்நாடு அரசு கடந்த ஜனவரி மாதம் முதல் ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதித்துள்ளது அனைவரும் அறிந்ததே. வருங்கால சந்ததியின் நலனை கருத்தில் கொண்டு, கொண்டுவரப்பட்ட இந்தத் தடைக்கு அனைவரும் முழு ஒத்துழைப்பு நல்க

வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இதனால், பிளாஸ்டிக் பொருட்களை உற்பத்தி செய்யும் சில நிறுவனங்கள் பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக பிற பொருட்களை உற்பத்தி செய்வதற்கு சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் துறை மூலம் கடனுதவி உட்பட பல்வேறு வசதிகளையும் மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்கி வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதை மேலும் அதிகரிக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசின் இந்த முடிவுக்கு சிறு, குறு தொழில் நிறுவன அதிபர்கள் உதவிட வேண்டும் என்றும், குறைந்த விலையில் மாற்று பொருட்களை உற்பத்தி செய்து, பொது மக்களிடையே கொண்டு சென்று, அரசின் இந்த ப்ளாஸ்டிக் ஒழிப்பு திட்டத்திற்கான வெற்றியில் நீங்களும் பங்கு கொள்ள வேண்டும் என்று உங்கள் அனைவரையும் இந்தத் தருணத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

வேலை வாய்ப்பினை பெருக்குவதற்கும், பொருளாதார வளர்ச்சியினை முன்னேற்றவும் உதவிடும் வகையில், 3,100 கோடி ரூபாய் மதிப்பில் தமிழ்நாட்டில் ராணுவ தளவாட உற்பத்தி முனையம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டு நிகழ்ச்சிக்கு மாண்புமிகு மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்கள் வருவதாக இருந்தார்கள். ஆனால், பல்வேறு காரணங்களால் வரமுடியவில்லை. இருந்தாலும், நம்முடைய கொடிசியா பகுதியிலே இந்த அமைப்பை உருவாக்குவதற்கு மாண்புமிகு மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கு உங்கள் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், மரியாதைக்குரிய பெரியவர் ஐயா வரதராஜன் அவர்கள் அழகாக, அருமையாக பல கருத்துக்களை இங்கே எடுத்து வைத்தார். ஒரு தொழிற்சாலை அமைப்பது எவ்வளவு கஷ்டம் என்பதை இங்கே விரிவாக எடுத்துரைத்தார். அதுவும், நிலம் எடுப்பதற்கு எவ்வளவு பிரச்சினை இருந்தது, அதற்கு யார் யாரெல்லாம் உறுதுணையாக இருந்தார்கள் என்பதையெல்லாம் இங்கே விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். அதுமட்டுமல்லாமல், பெரிய

தொழிற்சாலை வருகின்றபொழுது, அதிக முதலீடு தேவைப்படுகிறது, குறைந்த ஆட்கள் தான் அதிலே பணிக்கு சேர்க்கப்படுகின்றார்கள். அதே நேரத்தில், சிறு தொழில்கள் வருகின்றபொழுது அதிகமான வேலை வாய்ப்பு கிடைக்கின்றன, முதலீடு குறைவாக இருக்கின்றது, ஆகவே, வேலை வாய்ப்பை பெருக்குவதற்கு சிறு தொழிலை ஊக்குவிக்க வேண்டுமென்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். அம்மாவினுடைய அரசு எப்பொழுதும் உங்களுக்குத் துணை நிற்கும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

அதேபோல, பெரிய தொழில்கள் அதிகம் வந்தால்தான், சிறு தொழில்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். ஏனென்றால், பெரிய தொழிலுக்கு தேவையான உதிரி பாகங்களை சிறு தொழில் மூலமாகத்தான் கொடுக்க முடியும். பெரிய தொழில் ஊக்குவிக்கப்படுகின்றபொழுது சிறிய தொழில் தானாக வளரும் என்பதையும் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகின்றேன். எனவே, பெரிய தொழிலும், சிறிய தொழிலும் ஒரு வண்டிக்கு இரண்டு சக்கரம் போன்றது. இரண்டு சக்கரம் இருந்தால்தான் இலக்கை அடைய முடியும். ஆகவே, இரண்டு தொழில்களும் ஒன்றாக இணைகின்றபொழுது தான், தொழில் மேம்பாடு முன்னுக்கு வரும், தொழில் வளர்ச்சி காண முடியும்.

அதோடு இந்தக் கருத்தைச் சொல்கின்றபொழுது எவ்வளவு கஷ்டப்பட்டார் என்பதையும் ஐயா சொன்னார். நாங்களும் அதேபோலத்தான் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். ஒரு தொழில் பூங்கா அமைக்கின்றபொழுதே எவ்வளவு கஷ்டம் இருக்கின்றது. இதற்கு உங்களுக்கு பலர் உதவி செய்கின்றார்கள். ஆனால், ஒரு அரசை நடத்துகின்றபொழுது எவ்வளவு கஷ்டம் இருக்கும் என்பதை நீங்கள் உணர வேண்டும். இந்த மிகப்பெரிய, பரந்து, விரிந்த மாநிலம். 234 சட்டமன்ற உறுப்பினர்களையும், 39 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கொண்ட மாநிலம். இங்கே பல்வேறு பிரச்சினைகள் உருவாகின்றன, உருவாக்கப்படுகின்றன. சில அரசியல்வாதிகளின் சுயநலத்திற்காக உருவாக்கப்படுகின்றன. அண்மையில்கூட, சென்னையில், இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா

அவர்கள், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருக்கின்ற தொழிலதிபர்களும், வெளிநாட்டில் இருக்கின்ற தொழிலதிபர்களும் நம்முடைய நாட்டிற்கு வந்து தொழில் தொடங்குவதற்காக **2015–**ஆம் ஆண்டு மிகப்பெரிய தொழில் முதலீட்டாளர் மாநாட்டை நடத்தினார்கள். இதில், சுமார் ரூபாய் **2** இலட்சத்து

**42** ஆயிரம் கோடி தொழில் முதலீடு ஈர்க்கப்பட்டது. அந்தத் தொழில் முதலீட்டாளர்களுக்கு நமது அரசு சிறப்பாக உதவி செய்ததின் விளைவாக அத்தனைபேரும் ஆர்வத்தோடு, இப்பொழுது ரூபாய் **3** இலட்சத்து **431** கோடி முதலீடு செய்வதற்காக **304** நிறுவனங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடுவதற்கு முன் வந்திருக்கின்றார்கள்.

இவற்றையெல்லாம் அரசியலாக்கப் பார்க்கின்றார்கள். இது அரசியலுக்கு அப்பாற்பட்டது. ஒரு நாடு வளர்ச்சி பெற வேண்டுமென்றால் விவசாயம், தொழில் வளம் இரண்டும் சிறப்பாக இருக்க வேண்டும். அதற்கு அத்தனைபேரின் ஒத்துழைப்பும் சிறப்பாக இருக்க வேண்டும். இதிலெல்லாம் சிலர் அரசியல் செய்யப் பார்க்கின்றார்கள். தொழில் முதலீட்டாளர்களாகிய நீங்கள் அரசியல் காழ்ப்புணர்ச்சி இல்லாமல், எங்கள் தரப்பிலிருந்து, மாண்புமிகு தொழில் துறை அமைச்சராக இருந்தாலும் சரி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சராக இருந்தாலும் சரி, மற்ற துறைகளின் அமைச்சர்களாக இருந்தாலும் சரி, எப்பொழுது நம்முடைய சிறு, குறு, நடுத்தர தொழிலதிபர்கள் வருகின்றார்களோ அவர்களுக்கு தேவையான உதவிகளை உடனுக்குடன் செய்து கொடுக்க வேண்டுமென்று நாங்கள் ஆலோசனை வழங்கியிருக்கின்றோம். அவர்களை அணுகுகின்றபொழுது உங்களுக்குத் தேவையான அத்தனை உதவிகளையும் செய்வார்கள் என்பதை இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன். ஆகவே தான், ஒரு தொழிற்சாலை புதிதாக வரவேண்டமென்று சொன்னால், **30** நாட்களுக்குள் அதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்ற உத்தரவையும் நாங்கள் பிறப்பித்திருக்கின்றோம்.

ஆகவே, தொழில் செய்வதற்கு உதவிகரமாக இருக்கின்ற அரசு அம்மாவினுடைய அரசு. இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடங்கியதை, அம்மா அவர்கள் அரசு தொடர்ந்து செயல்படுத்தி, இந்தியாவிலேயே, தமிழகம் தொழில் துவங்க உகந்த மாநிலம் என்ற ஒரு பெயரை பெற்றிருக்கின்றது. அதற்குக் காரணம், தமிழகத்திலே சட்டம்—ஒழுங்கு சிறப்பாக இருக்கின்றது. மற்ற மாநிலங்களைப் பார்க்கின்றபொழுது தமிழகம் தான் சட்டம்—ஒழுங்க சிறந்த மாநிலமாக திகழ்ந்து கொண்டிருக்கிறது. டெல்லியில் அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்தியா டுடே என்ற ஆங்கில நாளேடு பல்வேறு மாநிலங்களில் சர்வே செய்ததில், சட்டம்—ஒழுங்கில் சிறந்த மாநிலத்தில் தமிழ்நாடு தான் முதலிடம் வகிக்கின்றது என்றும், அதற்கான விருதை மாண்புமிகு துணைக் குடியரசுத் தலைவர் மரியாதைக்குரிய வெங்கைய நாயுடு அவர்கள் வழங்கினார்கள்.

இதை எதற்காகச் சொல்கிறேனென்றால், ஒரு தொழில் தொடங்கும்பொழுது, அதற்கான வசதிகள் அந்த மாநிலத்தில் உருவாக்கப்பட வேண்டும். அதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்குத்தான் என்றைக்கும் இல்லாத அளவிற்கு, அதிகமான மேம்பாலங்கள், சாலை விரிவாக்கம் போன்றவற்றை கொடுத்திருக்கின்றோம். கடந்த கால ஆட்சிக்கும், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலும் சரி, இப்பொழுதும் சரி, சாலைகளின் விரிவாகக்கத்தை அதிகளவில் நாங்கள் செய்து கொண்டிருக்கின்றோம். 2 வழிச்சாலைகளை 4 வழிச்சாலைகளாகவும், 4 வழிச்சாலைகளை 8 வழிச்சாலைகளாகவும் உருவாக்கிக் கொண்டிருக்கின்றோம். சேலத்திலிருந்து கோவை வருகின்ற சாலை 8 வழிச்சாலையாக உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்தப் பணிகள் எல்லாம் துவங்கப்பட்டிருக்கிறது. அதேபோல், அவினாசியிலிருந்து மேட்டுப்பாளையம் வரைக்கும் சாலைகள் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளன. இப்படி பல்வேறு சாலைகளை விரிவாக்கம் செய்வதன் மூலமாக உட்கட்டமைப்பு

வசதிகளை சிறப்பாக செய்து கொடுப்பதன் மூலமாக தொழில் வளம் பெருகும். அம்மாவினுடைய அரசு தொழில்முனைவோர்களுக்கு உதவியாக இருந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இந்த அரசு உங்களுடைய அரசு, நீங்கள் எப்பொழுதும் நாடலாம். உங்களுக்குத் தேவையான திட்டங்களை நிறைவேற்றி வருகின்றோம் என்பதையும் சுட்டிக்காட்டி,

இந்த விழாவை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து கொள்வதோடு, நான் எப்பொழுதும் யாரையும் காக்க வைக்காமல் உரிய நேரத்தில் சென்று யாருக்கும் எவ்விதக் கஷ்டமும் கொடுக்கக்கூடாது என்று நினைப்பதுடன், நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்ததிலிருந்து இன்று வரை அதை கடைபிடித்தும் வருகின்றேன். இருந்தாலும் இன்றையதினம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 5 நிகழ்ச்சி என்று சொல்லிவிட்டு 30 நிகழ்ச்சி என்று பல்வேறு நிகழ்ச்சியை வைத்துவிட்டதன் காரணமாக சரியான நேரத்திற்கு வரமுடியவில்லை.

தொழில் வளம் பெருக வேண்டும், கொடிசியா இந்தியாவிற்கே முன்னோடியாக திகழ வேண்டுமென்று வாழ்த்தி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

நன்றி! வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**